497

THE WAR.

யுத்தம்.

By

S. SRINIVASA VENCATACHARI,

KUMBAKONAM.

SECOND PART.

(TAMIL)

SARADA VILASA PRESS,

Kumbakonam.

1915.

செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட

ஜனவரி மாதம் 1984 வருடம்

செப்பனிட்டு முடித்த

ஜனவரி மாதம் 1984 வருடம்

ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்.

THE WAR.

யுத்தம்.

By

S. SRINIVASA VENCATACHARI,

KUMBAKONAM.

SECOND PART.

(TAMIL)

SARADA VILASA PRESS,

Kumbakonam.

1915.

CONTENTS.

TERKEY & THE WAR. ... ...
GERMANY & THE WAR. ... ...
ENGLAND & TAE WAR. ... ...
INDIA & THE WAR. ... ...

V

TURKEY AND THE WAR.

துருக்கியும் யுத்தமும்.

துருக்கி இராஜ்யம் ஜர்மானியாவோடு சேர்ந்து அங்கிலேயர்களுடன் சண்டை ஆரம்பித்திருப்பது வெகு விசனகரமான ஸம்பவம். துருக்கி இராஜ்யத்தின் அபிவிர்த்தியைக் கோரிய ஒவ்வொருவரும் அச்சம்பவத்தைக்குறித்துவெகுவாய்ப் பரிதபிக்கிறார்கள். துருக்கி இராஜ்யம் வெகு புராதனமாயுள்ளது. அதற்கு ஒரு காலத்தில் தகுந்த ஐசுவரியமும் மேன்மையும் ஏற்பட்டிருந்தன. ஆயினும் ஐரோப்பாவின் மற்ற தேசங்களுக்கு இயற்கையாயுள்ள இராஜரீகத் தன்மையும் ஜனப்பயிற்சியும் துருக்கியர்களுக்கு இருந்ததில்லை. கட்டுக்குள்ப்பட்ட அரசிறையும் நவீன நாகரீகத்திற்குப் பிரதானமாயுள்ள ஜனசுதந்தரங்களும் அத்தேசத்தில் வெகுவாய் இல்லை என்றே சொல்லக்கூடும். அத்தேச மன்னரான சுல்தான் அவர்களும் சில பிரபுக்களுமே இராஜ்யநிர்வாகத்தை வகித்து வந்திருக்கிறார்கள். சைன்னியங்கள் கவனக்குறைவினாலும் தகுந்தப் பயிற்சியின்மையாலும், வெகு பரிதாப நிலையில் இருந்துவருகின்றன இக்கால உலகில் பரவியிருக்கும் தொழிற்பயிற்சியும், தேச ஐசுவரியத்தை விர்த்திசெய்வதில் ஊக்கமும் துருக்கியர்களை இன்னும் எட்டவில்லை. ஆனதால் அவ்வம்சங்கள் அத்தேசத்தில் வெகு குறைவுபட்டு தேசம் வறுமையை அடைந்திருக்கிறது. துருக்கிமகா தேசம் வரவர க்ஷீண கதியை அடைந்து தம் சத்துருக்களை எதிர்க்கமுடியாத நிலையில் வந்துவிட்டது.

தேசத்தைச் சீர்படுத்தக்கருதி நவீன கக்ஷி ஒன்று அத்தேசத்தில் தலைப்பட்டது. அக்கட்சியார்வெகு உற்சாக பரவசத்தோடு இராஜ்யநிர்வாகவேலையை ஆரம்பித்து அக்காலத்திய அரசரைவிலக்கி அவர்சகோதரருக்கு முடிசூட்டினார்கள். அவர்கள் திறமை அதோடு நின்றுவிட்டது. ராஜரீகத் தன்மை முன்னிலுங் குறைவுபட்டது. சமீபகாலத்தில் துருக்கி தேசத்திற்கு ஏற்பட்டிருந்த யுத்தங்களில் அத்தேசத்தின் துர்பலமும் மாறிய நிலைமையும் வெகுவாய் வெளியாக

நேர்ந்தது. அச்சண்டைகளினால் தேசத்திற்கு ஏற்பட்ட சிரமத்திலிருந்தும் வறுமையிலிருந்தும் அது வெளிவர இன்னும் வெகுகாலம் செல்லும்.

துருக்கிச் சக்கரவர்த்திக்குச் சொந்தமான பாஸ்னியா, ஹர்ஸிகோவைனா என்னும் சில பாகங்களை ஆஸ்டிரியா தேசத்தாரும், டிரிபோலி, கிரீட் முதலிய பற்பல பாகங்களை இன்னும் சில தேசத்தாரும் பிடுங்கிக்கொள்ள நேர்ந்தது. ஆகவே துருக்கி சமஸ்தானத்தின் ஐரோப்பிய சுதந்திரங்கள் வெகுவாய் இதர தேசத்தாரின் ஆளுகைக்கு உட்பட்டுவிட்டன. ஆசியாக்கண்டத்தில் துருக்கியர்களுக்குள்ள தேசங்களை ஜர்மனியர்கள் கைவசப்படுத்திக்கொள்ளக்கருதி வெகு தந்திரங்களைச் செய்துவருகிறார்கள். அவ்விடங்களில் இருப்புப்பாதைகளை உண்டுபண்ணும் வியாஜத்தை முன்னிட்டு ஜர்மனியர்கள் பற்பல சுதந்திரங்களைப் பெற்றுவிட்டார்கள். உபாயத்தாலும், பணத்தாலும் அவர்கள் துருக்கியிலுள்ள சில பிரமுக அதிகாரிகளை சுவாதீனப்படுத்திக்கொண்டு ஜர்மனிய வீரர்களையும் போர்க்கப்பல் தலைவர்களையும் அந்தேசப் பிரதான உத்தியோகங்களில் அமைப்பித்திருக்கிறார்கள். ஜர்மனி லஞ்சங்களுக்கு உட்பட்டு சில துருக்கியர்கள் தேச நன்மையை முற்றிலும் மறந்து சுயநன்மையை நாடித் தம் அரும் நாட்டை ஜர்மனியர்க் கழுகுக்கு இரையாகக் கொடுத்துவிட்டார்கள். அவர்கள் தேசத்துரோகிகள் என்பதில் தடையில்லை. துருக்கிதேசம் ஜர்மனியரின் வலையில் அகப்பட்டுக்கொண்டுவிட்டது. அவ்வலையை விட்டுத் தப்பித்துக்கொள்ள வேண்டுமானால் துருக்கியர்கள் தங்களுக்குள்ள சாமர்த்தியத்தையும் பலங்களையும் வெளிசகாயங்களையும் கைக்கொள்ளவேண்டும். இப்பொழுது நடைபெறும் யுத்த ஆரம்பத்திற்கு முன்பு ஆங்கிலேய கவர்ன்மெண்டார் துருக்கியர்களை யுத்தத்தில் சேராமல் நடுநிலைமையாய் இருக்கும்படிக் கோரி அதற்குப் பிரதிப்பிரயோஜனமாய் தாங்களும் தங்கள் இனத்தார்களும் துருக்கியின் சுவாதீனத்தைப் பாதுகாத்துக் கொடுப்பதாய் ஒப்புக்கொண்டார்கள். துருக்கிக்கு நேர்ந்த விபத்துக்காலங்களில் ஆங்கிலேயர்கள் துருக்கியின் சார்பாகவே இருந்துவந்திருக்கிறார்கள். இனியும் அவர்களுடைய பலத்தையும் சகாயத்தையுங்கொண்டு துருக்கியர்கள் தங்கள் ராஜ்யத்தைப் பலப்படுத்திக்கொள்ளக்கூடும்.

ஐரோப்பாவில் பலதேசங்கள் துருக்கியைப் பறித்துக்கொள்ள வேண்டிக் கத்துணை பூர்வ காலங்களில் ஆங்கிலேயர்களே அதற்கு இ

டையூறாக நின்று அத்தேசத்தைக் காப்பாற்றினார்கள். இனியும் அவர்களுடைய உதவியைக்கொண்டுதான் துருக்கி க்ஷேமப்படவேண்டும். அப்படியிருக்க துருக்கி கவர்ன்மெண்டார் தம்மைப் பலப்படுத்திக் கொள்ளும்வகை தேடுவதைத் தவிர்த்து தம்மிடம் எக்காலத்திலும் பரிதாபத்தை வகித்துவரும் காருண்ய ஆங்கிலேய இராஜாங்கத்தார்மீது காரணமின்றியிலும் துணிவாயும், தர்மவிரோதமாயும் யுத்தம் கூறி அவர்களுக்குள்ளப்பட்ட வெகு நாடுகளில் சிலவற்றை எதிர்ப்பது யோசனைகுறைவு. இத்தேசத்திலுள்ள மகமதியர்களெல்லோரும் அதனால் வெகு வெறுப்பையும் துக்கத்தையும் அடைந்திருக்கிறார்கள். துருக்கி இராஜாங்கத்தார் தாமே தம் நாச வழியைத் தேடிக்கொண்டுவிட்டார்கள். ஜர்மனியாவின் ராணுவச் செருக்கு வேரோடு மடிவதே யுத்தத்தின் நிச்சயமான முடிவு. யுத்தத்தின் முடிவு எத்தன்மையாக ஏற்பட்டாலும்கூட, துருக்கி ராஜ்யத்தின் சுயேச்சைமுற்றிலும் குன்றிவிடுமென்பது நிபுணர்களின் பொது அபிப்பிராயமில்லை. ஜர்மானியாஜயமடைந்தாலும் துருக்கி அவ்விராஜ்யத்திற்கு உள்ளடங்கிக்கப்பம் கட்ட நேர்ந்துவிடும். மற்றுமுள்ள கட்சிக்காரர்கள் வெற்றி பெற்றால், அதனால் துருக்கி ராஜ்யத்தார் ஒருவித ஸ்வாதிபத்தியத்தையும் எதிர்பார்க்க இடமில்லை.

தற்காலம் நடைபெற்றுவரும் யுத்தம் மதக்கொள்கையைப் பொருத்ததல்ல. கிறிஸ்துமதமாவது மகமதிய மதமாவது இந்த யுத்தத்தில் சம்பந்தப்படவில்லை. மேற்குறித்த மதங்களுக்கு எவ்வித தீங்கும் வர ஆங்கிலேயர்கள் பொறுக்கமாட்டார்கள். அவர்களுக்கு ஏராளமான மகமதிய பிரஜைகள் இருப்பதால் அவர்கள் இஸ்லாமுக்கு ஒரு பெரும் பலமும் உதவியுமாக இருக்கிறார்கள் என்ற பிரசித்தியை அடைந்துவிட்டார்கள். ஆங்கிலேய பிரதம மந்திரி அவர்கள் பார்லிமெண்டு சபையில்சொன்னபடி, பாஸ்னியா, ஹெர்ஸிகோவைனா என்றதுருக்கியர் நாடுகளை, ஜர்மனியார் தூண்டுதலின்பேரில், ஆஸ்டிரியா தேசத்தார் பிடித்து ஐரோப்பாவிலுள்ள சிற்றரசுகளை அழிப்பாய் நடத்தினதே, தற்போதைய யுத்தத்திற்கு முதற்காரணம். தமக்காகப் பரிந்துவந்தவர்களை விட்டு, தம் தேசங்களை கைப்பற்றி தம்முடைய நாசத்திற்கு முதற்காரணமாய் ஏற்பட்ட ஆஸ்டிரியா, ஜர்மனியா நாடுகளுடன், துருக்கியர் சேர்ந்திருப்பது அவர்களுடைய காலவிபரீதமேயன்றி வேறில்லை.

இராணுவச் செருக்குடன் உலகத்தை அடிமை செய்யலாமென்று நினைத்து பரபரப்பாய்ச் சண்டையை வலுவில் ஆரம்பித்த கெய்ஸர் சக

கரவர்த்தி ஐரோப்பாவிலுள்ள பெரும் பலங்களை எதிர்க்க நேர்ந்து, சுய பிரஜைகளை லட்சக்கணக்காய்ப் பலிகொடுத்துப் போனவிடங்களிலெல்லாம் தோல்வியடைந்து, தப்பியோடும் வகை தெரியாமல் கலங்குகிறார். "பிள்ளையாரைப்பிடித்தபேய் அரசமரத்தையும்பிடித்ததாம்" என்ற பழமொழிபோல் ஒன்றிலும் சம்மந்தப்படாமல் ஒதுங்கிநின்ற துருக்கியர்களைக் காரணமின்றிப் பிடித்திழுத்துப் போர்க்கடலில் அமிழ்த்தியது ஜர்மானிசக்கரவர்த்தியின் கொடுமைத்தன்மையைக் காட்டுகிறது.

துருக்கியைச்சேர்ந்தநாடுகளில்ஜனங்களுக்குப்புசிக்க ஆகாரமில்லாமல் பஞ்சம் மேலிட்டு ஜனங்கள் முன்னிலும் அதிகமான வறுமையை அடைந்து துக்கக் கடலில் மூழ்கியிருக்கிறார்கள். கால்நடைகளும் அருமைக்குழந்தைகளும் ஸ்திரீகளும் படும் கஷ்டங்கள் சொல்லற்கரிது.

துருக்கியை ஆளுகைசெய்யும்அரசருக்கும் அத்தேசநன்மையைக் கருதிய பொதுஜனங்களுக்கும் யுத்தத்தில் சிறிதும் விருப்பமில்லையென்றும் ஜர்மனியாருடைய கொடுமையாலும், துர்போதனையாலும் அத்தேசம் சண்டையில் ஸம்மந்தப்படநேர்ந்தது என்றும் இப்பால் வெளியாகிறது. அது வாஸ்தவமென்பதில் தடையில்லை.

இந்தியாவிலுள்ள மகமதிய ஜனங்கள் மேற்குறித்த அம்சங்களை பக்ஷபாதமின்றி தெளிவாய் ஆலோசனை செய்து, ஆங்கிலேய அரசாட்சியின்மீது முன்போல் ராஜவிசுவாசத்தையும் பக்தியையும் வகிக்கவேண்டுமென்று ஒரு மொழியாய்த் தீர்மானித்துவிட்டார்கள். அவர்களில் தலைமையாயுள்ள H. H. நைஸாமும், H. H. ஆகாகான் அவர்களும் இன்னும் பற்பல மகமதிய கனவான்களும் மகமதியர்கள் இத்தருணத்தில் அனுசரிக்கவேண்டுவதான உத்தமவழியைத் தெளிவாகவும், விஸ்தாரமாகவும் திறமையுடனும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

இந்தியாவிலுள்ள மகமதியர்கள் ராஜவிசுவாசத்திற்குப் பேர்போனவர்கள். அவர்கள் இத்தேசத்தில்விசேஷமேன்மையையும்பிரதிஷ்டையையும் அடைந்திருக்கிறார்கள். அவர்கள் நவீனநாகரீக முறையையும் நவீன ராஜீக வழிகளையும் பயின்றுவந்திருக்கிறார்கள். ஆங்கிலேய கவர்ன்மெண்டாரே அவர்களுடையமேன்மைக்குக் காரணமாயிருக்கிறார்கள். H. H. ஆகாகான் மொழிந்தபடி, அக்காருண்ய ராஜாங்கத்தாரைப்போல் உலகில் ஒரு மகமதிய அரசரும் இந்திய மகமதியர்களை நல்நிலைமைக்குக் கொண்டுவர முயற்சித்ததில்லையென்று துணிவாய் சொல்லக்கூடும். இந்திய மகமதியர்கள் தங்கள் இனத்தலைவர்கள் காட்டிய நல்வழியைத் தொடர்ந்து இந்தியாவில் முன்னிலும் அதிகமானகௌரவத்தையும், மேன்மையான பதவியையும் அடையும் வகை தேடிக்கொள்வார்கள் என்பதில் தடையில்லை.

S. SRINIVASA VENCATACHARI,

KUMBAKONAM.

VI

GERMANY AND THE WAR.

ஜர்மெனியும் யுத்தமும்.

ஜர்மானியாதேச நவீன சரித்திரத்தைப்படித்தவர்கள் அத்தேச
தின் முந்திய ஸ்திதிக்கும் சண்டைக்குப்பிந்திய அதன் குன்றியநிலை
க்கும் இருக்கும் தாரதம்யத்தைக்கண்டு வெகுவாய் வியப்பார்கள். சில கா
ங்களுக்கு முந்தி அது ஐரோப்பாவிலுள்ள வலுத்த நாடுகளில் பிர
னமாயிருந்தது. அது வெளிப்படையாய் காட்டிவந்த நாகரீகத்தன்
மதிப்பேறப்பெற்றது. அத்தேசக்கல்வியும் சாஸ்திரப்பயிற்சியும் உலகத்
ருக்கும் அத்தேசத்திற்கும் பெரும்பயனைக்கொடுத்துவந்தன. கைத்தொ
வில் ஜர்மானியாதேசம் வேறு ஒரு நாட்டுக்கும் பின்னடைந்ததில்லை.
தன்மையுள்ள அத்தேச மானிடருக்கு இயற்கையாயுள்ள அன்பையும்
தாபத்தையும் முற்றிலும் மறந்து, உலகத்திற்கு கொடுமையையும் ம
துக்கங்களையும் விளைவித்துவரும் காலாக்னிக்குச் சமானமான பெரும்போ
ரை ஒரு காரணமன்றி உண்டுபண்ணிவிட்டது அத்தேசத்தார் ஒவ்வொ
வருக்கும் அவமானத்தை உண்டுபண்ணக்கூடியது. அத்தேச சக்கரவ
தியின் இராணுவபல கர்வமே யுத்தத்திற்கு முக்கியகாரணம். தம்பலத்
உலகம் முழுமையையும் தாம் ஆளுகை செய்யலாம் என்ற அம்மன்ன
பேராசைநோயே இவ்வளவு விபரீதத்திற்கும் மூலகாரணம். அகன்
மான இராஜ்யத்தையும் பலத்தையும் உடைய ஆங்கிலேய இராஜ்யமு
கரைபுரண்ட ஸைந்நிய பலத்தை உடைய ருஷியாவும் நாகரீகம்வாய்
பிரஞ்சுக்காரர்களும் மற்றுமுள்ள ஐரோப்பிய சிற்றரசுகளுடன் ஜர்மான
சைன்னியபலத்தையும் அத்துடன் கெய்ஸரின் செருக்கையும் வேரோ
மடிக்கச்செய்துவிடுவார்கள் என்பதை அவர்கள் நினைத்தவர்களில்லை. உ
கத்தைக் கைவசப்படுத்திக்கொள்ள நினைத்து அத்தேச சக்கிரவர்த்தி ப
பல வருஷங்களாய் ஸைந்நியங்களைப்பெருக்கிக்கொண்டுச் சண்டைக்கு ஆர
ம்பிக்க எண்ணி சந்தர்ப்பங்களைப் பிரதீக்ஷித்து வந்தார். மற்றதேசத்தார்கள்
உலகில்ஸமாதானமே மேலிடவேண்டிப்பாடுபட்டுவரும் தருவாயில் ஜர்மன்
சக்கிரவர்த்தி ஆஸ்டிரியாதேசத்தை யுத்த ஆரம்பம் செய்யும்படி தூண்டி
தாமும் சண்டையில்புகுந்து பிரான்ஸில் படை எடுக்கக்கருதி ஒருவிதத்தி

ஞ்சம்மர்க்கப்படாமல் பொதுநிலைமையில் இருந்த பெல்ஜியத்தின்வழியாய்
ம் ஸைந்நியங்களை பிரான்ஸுக்கு கொண்டுபோக ஆரம்பித்தார். ஐ
ரோப்பாவிலுள்ள பிரதான தேசத்தார் யாவரும் பெல்ஜியம் எக்காலத்தி
லும் மற்று தேசத்தார்களுக்குள் நேரும் யுத்தங்களில் ஸம்பந்திக்கக்கூ
டாது என்றும், அப்படி அவர்கள் நடுநிலைமையாய் இருப்பதற்குப் பிரதி
ப்பிரயோஜனமாக மற்ற பிரதான தேசத்தார்கள் அதன் சுயேச்சையைப்
பாதுகாத்துக்கொடுக்கவேண்டும் என்றும் உடன்படிக்கை ஒன்று ஏற்ப
ட்டிருந்தது. அதற்கு ஜர்மானியா தேசத்தாரும் ஆஸ்டியர்களும் மற்றுமு
ள்ள பிரதான ஐரோப்பிய தேசத்தார்களும் கட்டுப்பட்டிருக்கிறார்கள். அ
ப்படியிருக்க அவ்வுடன்படிக்கைக்கு நேர் விரோதமாக ஜர்மானியர்கள்
பெல்ஜியத்தில் பிரவர்த்தித்தது அவர்களின் மதிப்புக்கும் தாடஸ்தியத்திற்
கும் குறைவன்றோ? மேலும் கெய்ஸர் சக்கிரவர்த்தி ஸமாதானத்தில்வெகு
வலைப்பட்டவர்போல் வெளிக்காட்டிவந்து அந்தரங்கத்தில் ஸைந்நியங்க
ளைப் பெருக்கியுத்த ஆயத்தங்கள்செய்து வந்ததும், சண்டைக்குத்தான்
வலிவில் ஆரம்பித்து உலகத்திற்கு மகா விபத்துகளை விளைவித்துவிட்ட
தும் ஐரோப்பாவிலுள்ள சிற்றரசுகளை ஸமயம் வாய்த்தபோது ஹிம்ஸித்து
வந்ததும், இதரதேசங்களைக்கட்டிக்கொள்ளத் துராசைப்பட்டு கபடநா
டகதந்திரங்களைச்செய்து வந்திருப்பதும், தம் பணத்தாலும் உபாயத்
தாலும் பற்பல தேசங்களிலுள்ள பிரமுகர்களில் சிலரை சுவாதீனப்ப
டுத்திக்கொண்டு, வஞ்சகமாய் பிறர்தேசங்களைக்கட்டிக்கொள்ள நினைத்து
தம் காசவழியைத்தேடிவருவதையும் உலகத்தார் இப்பால் நன்றாய் அறிந்
திருக்கிறார்கள். ஆயினும் அத்தேசச்சக்கரவர்த்தி தாம் நிரபராதிபோலும்
ஒருவருக்கும் தீங்கு நினைக்காதவர்போலும் மொழிந்து சமாதானத்திற்
குத்தம்மாலியன்றமட்டில் பாடுபட்டு தர்மவழியை நழுவாது அநுசரித்து
வந்த ஆங்கிலேயர்களும் அவர்களுடன்சேர்ந்து யுத்தம் செய்துவரும்
நண்பர்களுமே, சண்டைக்குக்காரணம் என்றும் கூறியிருப்பதும் உல
கில் ஸமாதானம் குன்றியிருப்பதை நோக்கி கெய்ஸர் பொய்க் கண்ணீர்
விட்டு நடிப்பது அவர் மோசவழியை வெளிக்காட்டுகிறது. நாம் ஒன்று
நினைக்கத் தெய்வம் ஒன்றைச்செய்ய நேருவது உலகிலுள்ள பொதுஸ்வபாவ
மன்றோ? அத்தன்மையாக கெய்ஸர் தம் துர்போதனைக்குச்சிறிதும்
செவிகொடாத பெல்ஜிய தேசத்தை ஒரு மூச்சில் விழுங்கிவிட்டு பிரான்
ஸில் அத்தேசத்தார் தயாராயில்லாத தகுந்த தருணத்தில் புகுந்து கொள்
ளைகொண்டு அத்தேசத்தை வென்று, அதில் முடிசூட்டிக்கொண்டு மற்று
முள்ளபிரதான ஐரோப்பியதேசங்களையும் அவ்வண்ணமே தனித்தனியாக
எதிர்த்துச்சுவாதீனப்படுத்திக்கொள்ளலாம் என்று கருதி பெல்ஜியத்தில்

யுருந்தவுடன் பெல்ஜியர்கள் காட்டிய வீரத்தன்மையாலும், பராக்கிரமத்தாலும் பிரமையடைந்து கலங்கி இலக்ஷக்கணக்கான தம் அரும்பிரஜைகளை இரைகொடுக்கநேர்ந்தது. கேய்ஸரின் நோக்கங்கள் கனவுபோல்முடிந்தன. “உடும்பு வேண்டாம் கைவிட்டால் போதும் என்று சொல்பவனைப்போல்” எத்தன்மையாகவாவது தாம் விரோதிகளுடைய பயமின்றி தம்மூர்போய்ச் சேர்ந்தால் போதுமென்று நினைக்கும் தருவாயில் கேய்ஸர் சக்கரவர்த்தி இப்பால் வந்துவிட்டார்.

பிரான்சும் அங்கிலேயர்களும் பெல்ஜியர்களும் ஓர்புறமும், ருஷியா மற்றொருபுறமாக சைந்நியங்களை ஏராளமாக சேகரித்துக்கொண்டு ஜர்மானியர்களை எதிர்க்கிறார்கள். ஐரோப்பாவிலுள்ள சிற்றரசுகள் பொதுவாய் ஆங்கிலேயர்கள் மீது பக்தியையும் ப்ரீதியையும் வகித்துவருகின்றன. ஆங்கிலேய கப்பற்சேனைகள் தம் பலத்தால் ஜர்மானியாவுக்குப்போகும் உணவுபதார்த்தங்களையும் ஸாமான்களையும் தடுத்துவிட்டார்கள். ஏராளமான ஜர்மனியர்கள் போரில் மாண்டு விட்டார்கள். ஜனங்களுக்குப்புசிக்க உணவு இல்லாமல் ஜனங்கள் வருந்துகிறார்கள். யுத்தம் இன்னும் எவ்வளவுகாலம் வரையில் நடந்துவருமோ தெரியவில்லை. இதற்குள் ஜர்மானியர்கள்படும் கஷ்டங்களை எடுத்துரைப்பது அஸாத்தியம். ஜர்மானியதேசம் பிணகாடுபோல் மங்கியிருக்கிறது. அவர்களுக்குள்ள வெளிநாடுகள் பிடிபட்டு இதரர்கள் வசம் வந்து விட்டன. சென்ற பல ஆண்டுகளாக ஜர்மானியர்கள் செய்துவந்த இராணுவமுயர்ச்சியும் யுத்தத்தில் ஐந்து மாதங்களாக அவர்கள்காட்டிவந்த பராக்கிரமும் அவர்களுக்கு ஒருபயனையுங்கொடுக்கவில்லை. அவர்களை அடுத்து அவர்கள் போதனைகளுக்கு உள்பட்டு சண்டையில் ஸம்மந்தித்துவந்த ஆஸ்டிரியா துர்க்கி இத்தேசங்களின் கதி அதோகதியாக முடிந்து வருகிறது. சூரத்தன்மையுடன் யுத்தத்தை ஆரம்பித்த ஆஸ்டிரியா ஐரோப்பாவிலுள்ள சிற்றரசுகளில் ஒன்றான ஸர்வியாவை எதிர்க்க முடியாமல் ஆரம்பம் முதல் தோர்வையை அடைந்து இருந்தவிடம் தெரியாமல் மறைந்து நிற்கின்றது. ருஷியா, ஆங்கிலேய சைந்நியங்கள் வரவர அதிகரித்து கடல் பொங்குவதைப்போல் கரைபுரண்டு சேர்க்கப்பட்டு வருகின்றன. ஜர்மானியர்கள் ஆதியில் பெல்ஜியர்களை எதிர்த்து உள்ளே பிரவேசித்த நிலைமையிலேயே இருந்து வருகிறார்கள். சென்ற பலமாதங்களாக அவர்கள் ஒரே நிலையாய் நின்றுவிட்டு ஒன்றும் தோன்றாமல் விழிக்கிறார்கள். ருஷியர்கள் மத்தியகாலத்தில் ஜர்மனியில் பிரவேசிக்க எத்தனித்து கரைபுரண்ட சைந்நியங்களை கிழ் பிரஷ்ஷியாவுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அவர்களைக் கண்டு ஜர்மானியர்கள் திகிலடைந்து விட்டார்கள். இனி ஜர்மானியர்கள் தோர்வை அடைந்து அவர்

கள் இராணுவமும் இராணுவச்செருக்கும் மடிந்துவிடுமென்பதில் தடையில்லை. இது நிற்க, ஜர்மானியர்கள் யுத்தத்தில் செய்திருக்கும் அட்டூழியங்கள் நாகரீகத்தன்மைவாய்ந்த ஒருவராலும் ஸகிக்கக்கூடியதல்ல. அவர்கள் பெல்ஜியத்தில் காரணமன்றி பிரவர்த்தித்ததும் அத்தேசத்திலுள்ள நாடுகளையும், வீடுகளையும்கொளுத்தி அழித்ததையும் லோவேன் என்னும் கல்விக்குப்பிரதானமாயுள்ள நகரத்தைக்கொளுத்தி அதிலடங்கிய அபூர்வ பிராசீன கிரந்தங்களையும் அரும் ஸாமான்களையும் நாசப்படுத்தியதையும் குழந்தைகளுக்கும் ஸ்திரீகளுக்கும் அவர்கள் காட்டிய கொடுமைகளையும், காயமடைந்த யுத்தவீரர்களையும், ஆஸ்பத்திரிகளையும், அவர்கள் பொசிக்கின கொடுமையையும் உலகத்தார் அறிந்து அவர்கள் மீது வெறுப்பையும் துக்கத்தையும் அடைந்து ஜர்மன் இராணுவச்செருக்கு வேரோடு மடிந்து விடவேண்டுமென்று கடவுளைப்பிரார்த்தித்து வருகிறார்கள்.

ஜர்மானியர்கள் இத்தன்மையான கொடுமையை யுத்தத்தில் காட்டிவருகிறது வியப்பல்ல. ஜர்மனி நவீனதேசம். அது சிறிதுகாலத்திற்கு முந்தி பற்பலபாகமாகப் பிரிந்து ஐகபத்யமில்லாமலிருந்தது. இப்பால் அது ஒன்றுசேர்ந்து ஜர்மனிசக்கரவர்த்தியின் ஆளுகைக்குள்பட்டது. ஆயினும் அத்தேச ஜனங்களுக்கு இராஜ்ய நிர்வாகத்தில் நேரிட்ட சுதந்திரங்கள் இல்லை. கேய்ஸரும் அவர் மந்திரிகளுமே பரிபாலனத்தை நடத்திவருகிறார்கள். அவர்கள் ஜனங்களுக்காவது ஜனப்பிரதிநிதிகளுக்காவது உத்திரவாதியல்லர். நவீன நாகரீகத்திற்கு இயற்கையாயுள்ள ஜன சுதந்திரங்கள் ஜர்மானியர்களுக்கு இல்லை என்றே சொல்லக்கூடும். ஜனங்களைக் கீழ்படியும்படி அத்தேசத்தில் கைக்கொள்ளப்படும் உபாயங்களில் தண்டோபாயமே பிரதானமாயுள்ளதென்று சிலர் சொல்லுவதுண்டு. இத்தன்மையுடைய ஜர்மானியர்கள் நாகரீகக்குறைவான செய்கைகளை செய்துவருவது ஆச்சரியத்தை உண்டுபண்ணக்கூடியதல்ல. ஆங்கிலேயர்களும் அவர்கள் இனத்தாரும் யுத்தத்தில் வெற்றியடைவார்கள் என்பதில் தடையில்லை. இனி ஐரோப்பாவில் இத்தகைய ஸம்பவங்கள் நேரிடாவண்ணமும் துர்பலஹிம்ஸை ஏற்படாமலிருக்கும்பொருட்டும், ஆங்கிலேயர்களும் அவர்கள் சிநேகபலங்களும் ஒன்றுகூடி உலகத்திற்கு நிரந்தரமான ஸமாதானம் விர்த்தியடையும்பொருட்டும் பெரும் ஒப்பந்தத்தைச்செய்வார்கள் என்பதில் தடையில்லை. உலகநாகரீகமும் சுயேச்சையும் இனிஇடையூறின்றிவளர்ந்து ஆங்கிலேயர்களுக்கும் அவர்களுடன் பாடுபட்டுவரும் பலத்தார்களுக்கும் பிரதிஷ்டைமுன்னிலும் அதிகரிக்கும் என்று சொல்லத்துணிவோம்.

சாரதா விலாஸ பிரஸ் கும்பகோணம்.

VII

ENGLAND AND THE WAR.

ஆங்கிலேயர்கள் யுத்தம்.

தற்காலம் நடைபெற்றுவரும் யுத்தம், அதன்கொடுமையையும் கோரத்தையும் உத்தேசிக்குமிடத்து, மகாபாரதத்தில் சொல்லப்பட்டிருக்கும் குருக்ஷேத்திரயுத்தத்திலும் மேலானது. அதற்குநிகரானயுத்தம் உலகசரித்திரத்தில் எக்காலத்திலும் ஏற்படவில்லை. அந்த யுத்தத்தின் முடிவைச்சார்ந்திருக்கும் அம்சங்கள் சாமான்னியமானவைகளல்ல. அது உலகில் பரவியிருக்கும் மானிட நாகரீகத்தன்மைக்கும் ஜர்மன் இராணுவமமதைக்கும் நாகரிக இன்மைக்கும் ஏற்பட்டிருக்கும் சண்டை. இனி உலகில் சுயேச்சையும் நாகரீகமும்ஜீவகாருண்யமும் முன்னிலும் அதிகமாய் விர்த்தியடையவேண்டுமா அல்லது ஜர்மன் இராணுவ இறுமாப்புமேலிட்டு உலகில்பல மனிதர்கள் சுயேச்சையை இழந்து பசுப்பிராயமாய் அந்தகாரத்தில் மறுபடியும் மூழ்கி தடுமாறவேண்டுமா என்றஅம்சம் தற்போதைய யுத்தத்தில் முடிவாகவேண்டியதாயிருக்கிறது. ஆங்கிலேயர்கள் இச்சண்டையில் ஸம்பந்திக்க நேர்ந்தது யுத்தத்திற்கு ஒரு கௌரவத்தையும் பரிசுத்தத்தையும் உண்டுபண்ணியிருக்கிறது. இந்தயுத்தத்தில் அவர்கள் சௌகரியமாவது அசௌகரியமாவது நேரிட்டு ஸம்மந்தப்படவில்லை. அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் கப்பல்ஸைந்நியபலத்தால் அவர்களுக்குச்சமுத்திரநாயகர் என்றகௌரவமும் மேன்மையும் ஏற்பட்டிருக்கின்றன. அவ்விதபலமும்மேன்மையும் உலகில் ஸமாதானம் மேலிட முக்கியக்காரணமாக ஏற்பட்டன. அவர்களுக்கு அகண்டமான இராஜ்யமும் திரளான ஐசுவரியமும் வாய்த்திருக்கின்றன. அவர்களுடைய பிரஜைகளுக்குள் ஐக்கியமும் நல்லுணர்ச்சி தேசாபிமானமும் திருப்தியும் மிகுந்துசந்தர்ப்பம் ஏற்பட்டால் தங்கள் உயிரைத்தேசத்திற்காக விடத்தயாராயிருக்கிறார்கள். அப்படியிருந்தும் ஜீவ

காருண்யத்தையும் எளிய தேசத்தார் மீது பரிதாபத்தையும் தங்கள் வாக்கை நிறைவேற்றும் விஷயத்தில் உறுதியையும் முன்னிட்டே அவர்கள் யுத்தத்தில் ஸம்பந்தித்துக்கொண்டார்கள். அப்படி அவர்கள் யுத்தத்தில் சேருவதற்குமுந்தி ஐரோப்பாவில் சமாதானம் உண்டாகவேண்டி அரும்பாடுகளைப்பட்டு வந்தார்கள். அவைகள் பயன்படாமல் போய்விட்டன. ஆங்கிலேயர்களும், மற்றுமுள்ள ஐரோப்பிய முக்கிய பலிஷ்டதேசத்தார்களும் பெல்ஜியம் எக்காலத்திலும் பொதுவாயிருந்துவரவேண்டும் என்றும் அதற்குப்பிரதிப் பிரயோஜனமாக அவர்கள் அத்தேசத்தின் சுயேச்சையைப் பாதுகாத்துக் கொடுக்கவேண்டுமென்றும் ஓர் உடன்படிக்கையைச்செய்துகொண்டிருந்தார்கள். அவ்வுடன்படிக்கைக்கு ஜர்மானியர்களும் ஆஸ்டிரியர்களும் கட்டுப்பட்டிருந்தார்கள். அவ்வுடன்படிக்கையைமீறி ஜர்மானியர்கள் அதற்குள் பிரவேசித்து அதன்வழியாய் பிரான்ஸ்தேசத்தின் மீது படையெடுக்க உத்தேசித்தார்கள். பெல்ஜியர்கள் அதைத்தடுக்கவே, அவர்களுக்கும் ஜர்மானியர்களுக்கும் பெருத்த யுத்தமுண்டாய்விட்டது. மற்ற ஆங்கிலேயர்களுக்கும் பிரஞ்சுக்காரர்களுக்கும் ருஷியர்களுக்கும் பரஸ்பர ஸகாயத்தை உத்தேசித்து ஓர் உடன்படிக்கை ஏற்பட்டிருந்தது. இந்நிலைமையில், நியாயவழியிலிருந்துகொண்டு, தம்மைக்காத்துக்கொள்ள ம்பி வெகு பராக்கிரமத்தைக்காட்டிவந்தபெல்ஜியம் என்னும் சிறியதேசத்தைஜர்மானியர்களுக்கு இரையாகக்கொடுத்துத்தம்மை நம்பியபிரான்ஸ் ருஷியா இவ்விரு சிநேகிதர்களையும் காலத்தில் கைவிட்டுத்தாம் ஒதுங்கிநின்று வேடிக்கை பார்த்துவருவது உசிதமா அல்லது பலவானே சிரேஷ்டன், பலமுள்ளவன்பங்கே நியாயம் என்னும்கொள்கையை அநுஷ்டித்து ர்பலமுள்ளவர்களை வதைத்துவரும் ஜர்மானியரின் கொடுமையையும் இ றுவ இறுமாப்பையும் வேரோடுதொலைத்து யுத்தத்தில் புகுந்து வெற்றிபெறுவது தர்மமா என்ற அம்சத்தை ஆங்கிலேயர்கள் நிதானிக்கவேண்டியதாகநேர்ந்தது. ஆங்கிலேயர்கள் எக்காலத்திலும் தர்மவழியைநாடியவர்கள். அவர்கள் துர்பலமான தேசங்கள்மீது பரிதாபத்தைவகித்து அவைகளை நன்னிலைமைக்குக்கொண்டுவருவதில் வெகுஉற்சாகத்தைவகித்துவந்தவர்கள். அவர்கள் தேசசரித்திரத்தைப் படித்தவர்களுக்கு இத்தன்மை வெகுவாய் வெளியாகும். தர்மமேஜயம் என்பதே அவர்கள் முக்கியகொள்கை. தம்மைப்போல் பிறரையும் நினைத்து நேசிப்பது ஆங்கிலேயரின் சுபாவகுணம். தம்மை அடுத்தவர்களான ருஷியர்களுக்கும் பிரஞ்சுக்காரர்களுக்கும் யுத்தத்தில் உதவிபுரிந்து பெல்ஜியத்தை மீட்டுக்கொடுத்து உலகத்தின் நாகரீகத்திற்கும் சமாதானத்திற்கும் பெரும் இடையூறான ஜர்மன்

இராணுவ பலத்தை மடிக்கச்செய்வதே தமது முக்கியக்கடமை என்று கூறி ஆங்கிலேயம் யுத்தத்தில் தமது பலத்துடனும் ஐசுவரியத்துடனும் புகுந்திருப்பது அத்தேசத்தின் பூர்வசரித்திரத்திற்கும் பிரதிஷ்டைக்கும் ஒற்றதன்றோ? அதனால் அவர்களுக்கு உலகில் முன்னிலும் அதிகமான கீர்த்தி ஏற்பட்டுவிட்டது. தர்மத்தைஸ்தாபித்துக்கொடுமையை அடக்குவதில் அவர்களுக்கு வெகு நற்பெயரும் உலகத்தாரின் நன்றியும் ஏற்பட்டுவிட்டன. உலகத்தைத் தம் பலத்தால் ஜயித்துக்கட்டிக்கொள்ளவேண்டுமென்றுநினைத்த ஜர்மன் சக்கரவர்த்தியின் நினைப்பு கனவாகவேமுடிந்து விட்டது.

உலகம் முழுமையும் பரவிய ஆங்கிலேய மகாராஜ்யம் யுத்தத்தில் வெளியிட்டுவரும் உற்சாக பரவசமும் ஆங்கிலேய மகாசக்கிரவர்த்தி அவர்களுடைய பிரஜைகளுக்கு இப்பா[illegible]த யுத்தத்தில் உண்டாயிருக்கும் குதூகலமும் அவர்கள் அவசியமானல் தங்களையும் தங்கள் அரும் பொருளையும் தேசத்திற்குத்தத்தம்செய்தும் இனியும் செய்யத்தயாராயிருக்கும் தன்மையும் மகாசக்கரவர்த்தி அவர்களுடைய இராஜ்யபரிபாலனம் ஜனங்களுடைய நன்றியில் பதிந்துப் பிரஜைகள் ஒரேகுடும்பத்தில் பிறந்த சகோதரர்களைப்போல் ஒருவருக்கு ஒருவர் ஒருமைப்பாட்டைய பரஸ்பர நல்லுணர்ச்சியையும் வாஞ்சையையும் வகித்துவருகிறார்கள் என்பதை தெளிவாய்க்காட்டுகின்றன. ஆங்கிலேய யுத்த மந்திரிபதவியி தற்காலம் அமைந்திருக்கும் கிச்சனர் பிரபு அவர்கள், மகாஜனங்களை யுத்தத்தில் சேரவேண்டி அனுப்பியகோரிக்கை அத்தேசத்தாரால் ஆவலுடன் அங்கிகரிக்கப்பட்டு இருபதுலக்ஷம்பலமுள்ள ஆங்கிலேயர்கள் ஸைந்நியத்தில்சேர்ந்துவிட்டார்கள். இனியும் அநேக உத்தம ஆங்கிலேயர்கள் சேரத்தயாராயிருக்கிறார்கள். இவர்கள் ஸ்ரீமான்னியஸைன்னிங்களைப் போன்றவர்களல்ல. அவர்களுக்குத்தேசாபிமானம் மேலிட்டு தங்கள் தேசத்தைக்காப்பாற்றும் கைங்கரியத்தில் ஸம்பந்தித்து ஜன்ம ஸாபல்லியம் பெறவேண்டும்என்ற அவாவோடு ஸைன்னியத்தில் சேர்ந்திருப்பவர்கள். இத்தன்மையுள்ளவர்களை எளிதில் ஜயிப்பது ஸாத்தியமானதல்ல. இவர்களும் இவர்களைப்போன்றவர்களும் யுத்தத்தில்சேர்ந்துவிட்டால் ஜர்மன் இராணுவம் திகிலடைந்து பின்னடைவார்கள் என்பதில் தடையில்லை. ஏற்கனவே ஆங்கிலேயகப்பல் ஸைன்னியபலத்தால் ஜர்மானியகப்பல்கள் ஓர்புறம் அடைபட்டு வெளிக்கிளம்பஇடமில்லாமல் வெகு ஸங்கடப்பட்டும் அவர்களுக்கு வெளியூர்களிலிருந்து வரக்கூடிய பதார்த்தங்கள் வர இடமில்லாமல் தடைபட்டும் வரும்நிலைமையில் ஆங்கிலேயஸைன்னியப்பெ

ருக்தால் ஜர்மானிய தரைசைந்யங்களும், முன்னிலும் அதிகமாய் வதைக்கப்பட்டால் ஜர்மானியர்களின் கதி எத்தன்மையை அடையும் என்பதை யாவரும் எளிதில் நிதானிக்கக்கூடும். ஜர்மானியர்கள் இலக்ஷக்கணக்காய் யுத்தத்தில் மாண்டுவிட்டார்கள். சிறு பிராயமுள்ள பையன்களைச் சைன்னியத்தில் சேர்த்திருக்கிறார்கள். அவர்களுக்குள் பஞ்சம் அதிகரித்துவருகிறது. ஜர்மானியர்களுக்கு யுத்தத்தில் உற்சாகமில்லை. ஆங்கிலேயர்கள் தங்களுக்கும் தங்கள் இனத்தாருக்கும் வேண்டிய உணவுபதார்த்தங்களை தங்கள் கப்பல் சைன்னியபலத்தால் பற்பல தேசங்களிலிருந்து தருவிக்கிறார்கள். அவர்களுக்கு அகண்ட ஐசுவரியமுண்டு. சைன்யங்களும் வெகுவாய் சேர்ந்துவிட்டன. ருஷியர்களும் ஏராளமான சைன்யங்களைச் சேர்த்தும் இனியும் சேகரித்துக்கொண்டுமிருக்கிறார்கள். மற்றுமுள்ள பலங்களும் வீரத்தன்மையுடனும் தேசாபிமானத்துடனும் போர் புரிந்து வருகிறார்கள். ஆகையால் ஆங்கிலேயகக்ஷியார்கள் யுத்தத்தில் வெற்றியடைவார்கள் என்பது திண்ணம்.

சாரதா விலாஸ பிரஸ் கும்பகோணம்.

VIII

INDIA AND THE WAR.

இந்தியாவும் யுத்தமும்.

ஐரோப்பாவில் நேர்ந்திருக்கும் யுத்தம் உலகசுயேச்சைக்கும் நாகரீகத்திற்கும் வெகு அபாயமாயுள்ளது. அதனால் உலகத்திற்கு விளைந்திருக்கும் விபத்துகள் சொல்லற்கரிது. உலகக்கைத்தொழில்களும் வியாபாரமும் குன்றிவிட்டன. உயிர்ச்சேதமும் பொருள்சேதமும் மட்டிலடங்கக்கூடியவைகளல்ல. தேசங்கள் தடலாகமாறிவிட்டன. அருங்குழந்தைகளும் ஸ்திரீகளும் ஆயிரக்கணக்காய் கதியற்று வருமையை அடைந்து துயரப்படுகிறார்கள். உலகத்தில் பிரளயகாலம் நெருங்கிவிட்டதுபோல் தோன்றுகிறது. இதினால் ஜனங்களுக்கு நேர்ந்த ஆயாஸத்திலிருந்தும் கஷ்டத்திலிருந்தும் தெளிய இன்னும் ஒரு நூற்றாண்டு செல்லும். இத்தன்மைக்குக் காரணரான கெய்ஸர் சக்கரவர்த்தி என்னகதியை அடையப்போகிறாரோ தெரியவில்லை. உலகத்தார் அனைவரும் தற்காலம்படும் அபாயமும் வருமையும் கெய்ஸரைச் சார்ந்தவைகளேயல்லாமல் வேறில்லை. அவைகளுக்கு கெய்ஸரே ஸர்வவல்லமையுடைய கடவுள் முன் உத்திரவாதம் செய்யவேண்டியவராக இருக்கிறார். தற்காலயுத்தம் நிஷ்பக்ஷபாதமாய் எழுதப்படும்காலத்தில் யுத்தத்தில் ஜர்மானியர்கள் செய்துவந்த அட்டூழியங்கள் அவர்களுக்கு வெகு அவமானத்தையும் வெட்கத்தையும் தரக்கூடியவாறு எடுத்துரைக்கப்படும் என்பதில் தடையில்லை. ஜர்மானியர்கள் தாங்கள் அடைந்திருந்த உன்னத பதவியைவிட்டு நழுவ

விட்டார்கள் என்பதே உலகத்தாருடைய அபிப்பிராயநிலை. நாகரீகத்தன்மையில்லாதப் பாமரதேசங்களில் ஒன்றாகவே ஜர்மானியா இப்பால் மாறிவிட்டது.

பிரிட்டிஷ் மகாராஜ்யம் ஸம்மந்தப்பட்டமட்டில் இந்தயுத்தம் அவ்விராஜ்யத்திற்கு ஒருவாறாக அனுகூலமென்றே சொல்லக்கூடும். அவ்வரசிறைக்குள்பட்ட பிரஜைகள் யுத்தத்தை முன்னிட்டுத்தேசாபிமானத்தையும் இராஜவிசுவாசத்தையும் எல்லையில்லாமல்வகித்துச்சண்டையில் உற்சாகத்தையும் தைரியத்தையும் விடாமுயற்சியையும் காட்டி சகோதரபாவத்துடன் எல்லோரும் ஒன்றுசேர்ந்து தங்கள் பொருளையும் தங்களையும் தேசத்திற்குத் தத்தம்செய்யத் தயாராயிருந்து வருகிறார்கள். ஆங்கிலேயத்திற்குள்பட்ட வெளிநாடுகளும் ஒன்றுகூடி தாய்நாட்டுடன் சேர்ந்து தங்கள் தங்கள் கடமைகளைப்பக்தியுடனும் சிரத்தையுடனும் செய்து வருகிறார்கள்.

இந்திய தேசத்திற்குச்சண்டை ஆரம்பத்திற்குப்பிறகு விசேஷ பொறுப்பும் மதிப்பும் ஏற்பட்டுவிட்டன. இந்தியர்கள் எக்காலத்திலும் இராஜவிசுவாஸிகள். இராஜவிசுவாஸம் என்பது இந்திய சாஸ்திரப்பிரமாணங்களின்படி இந்தியர்களால் வகிக்கப்படவேண்டுவதான மதக்கொள்கை. அனுஷ்டானத்திலும் அவர்கள் இராஜவிசுவாஸத்தில் சிறந்தவர்கள். அரசரை ஈசுவராம்சம் உள்ளவராக நினைக்கும்தன்மை இந்தியர்களுக்கு பொதுவாயுண்டு. இந்துமகாதேசம் கடவுள்கிருபையால் ஆங்கிலேயர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதென்பதே இந்தியர்களின் பொதுநோக்கம். இந்நோக்கத்தை உள்கொண்டிருக்கும் இந்துமகாஜனங்கள் ஆங்கிலேயத்திற்கும் இந்தியாவுக்கும் ஏற்பட்டிருக்கும் சிநேகமும் ஸம்மந்தமும் இத்தேசத்தின் சிறந்த நன்மைக்கு ஒற்றதாய் ஏற்பட்டுள்ளது என்றும் அவ்விருதேசங்களுக்கும் ஏற்பட்டிருக்கும் சம்மந்தத்திற்கு ஏதாவது ஹானிவருமாயின் அதைப்பார்க்கிலும் இத்தேசத்திற்கு நேரிடக்கூடிய மகாவிபத்துவேறில்லை என்றும் எண்ணுகிறார்கள். இந்துதேசத்தை உத்தாரணம்செய்யும் விஷயத்தில் கடவுள் தங்களை ஒருகருவியாக ஏற்படுத்தியிருக்கிறார் என்றும் தங்களுக்கு இவ்வுத்தம கைங்கரியம் ஏற்பட்ட

நிலைமையில் அதைத்தங்கள் திருகாணசத்தியாய்ப்பாதுகாத்து வந்து வரவேண்டும் என்றும் எண்ணியே ஆங்கிலேயர்கள் இந்தியதேச பரிபாலனத்தை நடத்திவருகிறார்கள். அவர்களின் பரிபாலன அமைப்புகள் அனைத்தும் இத்தன்மையை உதாகரித்துக்காட்டுகின்றன. அவ்விருதரத்தாரும் இவ்வண்ணம் பரஸ்பர அன்பைக்காட்டிவருவதால் பலவாறுகப்பிரிந்து உள்கலகத்தாலும் வெளி அரசர்களின்பயத்தாலும் க்ஷீணதசையை அடைந்துவந்த இந்தியர்கள் ஆங்கிலேய அரசிறையில் பற்பல அரும்சுதந்திரங்களைப்பெற்று ஐகமத்தியத்துடன் தேசாபிமானத்தன்மையை உள்கொண்டு நாகரீகத்தில் சிறந்து தங்கள்தேச இராஜ்யநிர்வாகத்தில் புகுந்து நன்னிலைமைக்கு வந்துவிட்டார்கள். அவர்களுக்கு ஆங்கிலேயர்களிடம் இருக்கும் நன்றிக்கு அளவில்லை. யுத்தத்தில் இத்தேச அரசர்களும் ஜனங்களும் காட்டிவரும் உற்சாகமும் புரிந்துவரும் பொருளுதவியுமே மேலேகூறப்பட்டுள்ள அம்சங்களுக்கு நற்சாக்ஷி. இந்தியமகாதேசம் தம் பொருளனைத்தையும் தம் அரும்புதல்வர்களையும் யுத்தத்தில் மகாசக்கரவர்த்திஅவர்கள் ஆதீனத்தில் வைத்துவிட்டதாகவே சொல்லலாம். இந்தியர்கள் ஆங்கிலேய இராஜ்யத்திற்காக யுத்தத்தில் போர்புரியும் பெரும் பாக்கியத்தை பெற்றுவிட்டார்கள். அவர்கள் காட்டிவரும் வீரத்தன்மை ஆங்கிலேய இராணுவத்தின் கியாதிக்கு ஒற்றதாகவே இருந்துவருகிறது. இப்பொழுது நடைபெற்றுவரும் யுத்தம் பிரிட்டிஷ் ஆளுகைக்குள்பட்ட பிரஜைகளையும் குறிப்பாய் இந்தியர்களையும் ஐக்கியப்படுத்தித்தேசாபிமானத்தை ஊட்டிவிடக்காரணமாயிருந்ததைப்பற்றி அனுகூலமென்றே சொல்லவேண்டும். பிரஜைகளை ஒருமைப்படுத்திப்பரஸ்பர பரிதாபத்தையும் அன்பையும் உண்டுபண்ணும் விஷயத்தில் பொதுவிபத்தைப்போன்ற கருவியே முக்கியமாயுள்ளது.

இந்தியாதேசத்தின்சரித்திரம் இனி நூதனஸ்திதியை அடைந்துவருகிறது. பிரிட்டிஷ்அரசிறைக்குள்பட்ட மற்றுமுள்ள பிரதானதேசங்களைப்போல் இந்தியாவும் எண்ணப்படும். அதன்மதிப்பும் பிரிட்டிஷ் இராஜரீக அமைப்பில் அதன்விசேஷமும் ஆங்கிலேயர்களால் அனுஷ்டானபூர்வமாய் இப்பொழுது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அவ்வரசிறையில் இந்

தேசம் ஒன்றினும் ஸ்திரமாய் அமைந்து அதில் சம்மந்தப்பட்டுவருகிறது. இவ்விதகௌரவம் இத்தேசத்திற்கு ஏற்பட்டிருப்பதைக்கண்டு ஒவ்வொரு த்தியரும் ஆனந்தத்தை அடைவாரென்பதில் தடையில்லை. அவ்வித கௌரவம் ஸாமான்யமானதல்ல. இத்தேசத்தார் தங்களுக்குஏற்பட்டிருக்கும் நூதனகௌரவத்தையும் தங்கள் உத்திரவாதங்களையும் உணர்ந்து முன்னிலும் அதிக இராஜவிசுவாஸத்தை வகித்து நாகரிகமும் தயாளமும் வாய்ந்த ஆங்கிலேய அரசாளியாருக்குத்தங்கள் நன்றியை கிரியாபூர்வகமாக வெளிக்காட்டித் தேசத்தை நன்னிலமைக்குக் கொண்டுவரும்வழியை அனுசரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

சாரதா விலாஸ பிரஸ் கும்பகோணம்.

CONTENTS.

	PAGE.
TERKEY & THE WAR.	1.
GERMANY & THE WAR.	5.
ENGLAND & TAE WAR.	9.
INDIA & THE WAR.	13.